# இலண்டன் தமிழ் நிலையம் - திருக்குறள் போட்டி 2021

## ஊ பிரிவு

| ஊ பிரிவு | ஆண்டு 8, ஆண்டு 9 | Year 8 / Year 9 |
|---|---|---|

மூன்று கேள்விகளுக்கும் விடை கூற வேண்டும். அத்துடன் ஏதேனும் ஒரு குறளுக்குப் பொருள் கூற வேண்டும்.

1. ***திருக்குறளில் எத்தனை குறட்பாக்கள் உண்டு?***
   *ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட்பாக்கள் (1330 குறட்பாக்கள்)*

2. ***திருக்குறளின் முப்பால்கள் எவை?***
   *அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்*

3. ***பாரதியார் வள்ளுவரை எவ்வாறு சிறப்பித்துப் பாடியுள்ளார்?***
   *வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
   *வான்புகழ் கொண்ட தமிழ்நாடு*

***துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்***

***துப்பாயதூஉம் மழை (குறள் 12)***

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும். Rain produces good food and is itself food.

***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்***

***தெய்வத்துள் வைக்கப்படும் (குறள் 50)***

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான். He who on earth has lived in the conjugal state as he should live, will be placed among the Gods who dwell in heaven.

***நன்றே தரினும் நடுவைகந்தூஆம் ஆக்கத்தை***

***அன்றே ஒழிய விடல் (குறள் 113)***

நன்மையே தருவதாக இருந்தாலும் நீதியை விட்டு விலகுவதால் வரும் லாபத்தை, அப்பொழுதே விட்டு விடுக. Forsake in the very moment (of acquisition) that gain which, though it should bring advantage, is without equity.

***சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க***

***சொல்லின் பயனிலாச் சொல் (குறள் 200)***

சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்லவேண்டும், பயன் இல்லாதவைகளாகிய சொற்களை சொல்லவே கூடாது. Speak what is useful and speak not useless words.

***நெருநல் உளனொருவன் இன்றுஇல்லை என்னும்***

***பெருமை உடைத்து இவ்வுலகு (குறள் 336)***

நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை என்று சொல்லும்படி நிலையாமையை உடையது இவ்வுலகம். This world possesses the greatness that one who yesterday was is not today.

***எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்***

***மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 423)***

எந்தக் கருத்தை எவர் சொன்னாலும், அக்கருத்தின் உண்மையைக் காண்பது அறிவு. To discern the truth in everything, by whomsoever spoken, is wisdom.